சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பாகுபாடின்றி மாநிலம் முழுவதும் இரயில் கட்டணச் சலுகை போல் நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி துணையாளருடன் (escort) பயணம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந. 2) துறை

அரசாணை(நிலை) எண். 18 நாள்: 31–05–2010

வைகாசி 17, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை(நிலை) எண். 233, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 3.12.2007.
2. அரசாணை(நிலை) எண். 153, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29.10.2008.

மேலும் படிக்க:–

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.8246/ஆர்.டி 4/2008, நாள் 11.1.2008 மற்றும் 29.6.2009.

-------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பேருந்து பயணச் சலுகைகளுடன் கூடுதலாக மாற்றுத் திறனாளிகளுக்கு ஆண்டுக்கு நான்கு தடவைகள் (இரண்டு பயணங்கள்) மாநிலத்திற்குள் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் அனைத்து சேவைகளிலும் (விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து மற்றும் பிற சேவைகளிலும்) பயணம் செய்ய 75% பேருந்து கட்டணச் சலுகையும் மற்றும் 25% பேருந்து கட்டணத் தொகை மாற்றுத் திறனாளிகளிடமிருந்தும் வசூலிக்கப்படும் என்றும் 75% கட்டணத் தொகையை சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை ஏற்றுக் கொள்ளும் என்றும் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளபடியான இழப்பீட்டுத் தொகையை பட்டியலிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுப்பி மீள பெற்றுக் கொள்ளலாம் என்றும் மாற்றுத் திறனாளிகள் பயணம் மேற்கொள்ளும்போது பேருந்து நடத்துனரிடம் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் அசலினை காண்பித்து அவ்வட்டையின் நகல் ஒன்றினை நடத்துனரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மாநிலம் முழுவதும் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பாகுபாடின்றி இரயில் பயணக் கட்டணச் சலுகைபோல் நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி பயணம் செய்ய அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிக்கு உடன் வரும் ஒரு துணையாளருக்கும் (escort) இரயிலில் 75% பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படுவது போன்று அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் வழங்கலாம் என்றும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள அதே நடைமுறைகளைப் பின்பற்றலாம் எனவும் முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

i. துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாத மாற்றுத் திறனாளிகளுடன் பயணம் செய்யும் துணையாளர் (escort) ஒருவருக்கு நான்கில் ஒரு பங்கு கட்டணத்தில் (75%) கட்டணச் சலுகையுடன் மாநிலம் முழுவதும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (உள்ளூர் பேருந்து, குளிர்சாதனப் பேருந்து நீங்கலாக, பிற சேவைகளில்) பயண எண்ணிக்கை உச்சவரம்பின்றி பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாற்றுத் திறனாளிகள் தன் துணையாளருடன் (escort) இரயில் கட்டணச் சலுகை போல் நான்கில் ஒரு பங்கு கட்டணத்தில் (இருவருக்கும்) பயணம் செய்யலாம்.

ii. மாற்றுத் திறனாளிகள் பயணம் மேற்கொள்ளும் போது, பேருந்தின் நடத்துனரிடம் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையின் அசலை காண்பித்து அவ்வட்டையின் நகல் ஒன்றினை நடத்துனரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நடைமுறையையே பின்பற்றப்பட வேண்டும்.

iii. துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாத மாற்றுத் திறனாளிகள் மேற்கண்ட சலுகையினைப் பயன்படுத்தி அவருடன் துணையாளர் ஒருவரை அழைத்துச் செல்ல விரும்பினால் அந்த மாற்றுத் திறனாளிகள் துணையாளரின் உதவியின்றி பயணம் செய்ய இயலாது என உரிய மருத்துவரிடம் சான்றிதழ் பெற்று அதன் நகல் ஒன்றினை நடத்துனரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நடைமுறையையும் பின்பற்ற வேண்டும்.

iv. அரசாணை(நிலை) எண்.153, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 29.10.2008ல் வழங்கப்படுவது போன்றே மாற்றுத் திறனாளிகளுடன் செல்லும் துணையாளருக்கு வழங்கப்படும் 75% பயணக் கட்டணச் சலுகைக்கு செலவாகும் மொத்தத் தொகையையும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையே ஈடு செய்யும்.

4. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித் துறை அ.சா. எண்.நிதி (சமூக நலம்)/27714/10, நாள் 28.5.2010.

( ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை– 9/18/35
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை– 18/35 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை– 5/35/79

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் போக்குவரத்து அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை –9
அனைத்துப் பிரிவுகள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை –9
இருப்பு கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.